அபி :—வேலையில் உயர்ந்த தென்றும் இழிந்ததென்றும் இல்லையப்பா. படித்தவர்கள் இந்த வேலையைத்தான் செய்யலாம், இதைச் செய்யக்கூடாது என்ற காலம் மலையேறிவிட்டது. எந்த வேலையாயினும் இழிவென்று கருதாமல் செய்யவேண்டும். தெருவைச் சுத்தம் செய்யும் வேலையை ஒரு கலையாகக் கற்றுக் கிராமங்களில் சென்று சுத்தம் செய்யும் தொண்டர் கூட்டத்திலும் இப் புதுக்கல்லூரி மாணவர் கலந்து கொண்டனர். கட்டடவேலை, எருச்சேமிப்பு வேலை (Compost manure) தோட்டவேலை, பூங்கா அமைத்தல் முதலியவற்றிலும்கூட ஈடுபடுவார்கள் எங்கள் கல்லூரி மாணவர்கள்.

ராமு :—எங்கள் விஷ்ணுபுரம் விஞ்ஞானக் கல்லூரியில் கூட சர்வகலாசாலையார் அனுப்பிய சுற்று வட்டக் கடிதத்தைப் (circular) பற்றிப் பேசிக் கொண்டார்கள். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. அதோ ஆஜானுபாஹுவான தோற்றம் சாக்லெட் நிறக்கம்பிளி உடை, அதற்கு ஏற்றதான கழுத்துப்பட்டை, அழகான கிராப்புத்தலை, —ஆகிய இவற்றுடன் காட்சியளித்துக் கொண்டும் கல்லுருளையைக் (Roller) காலால் உருட்டிக்கொண்டும் ஊக்கமுடன் உழைக்க வழிகாட்டுகிறாரே அவர் யார்?

அபி :—அவர் தாம் எங்கள் கல்லூரித் தலைவர் திருத்தகு J. ஃபிராங்கோ M. A., Oxon, O. B. E. அவர்கள் இந்தக் குப்பை மேட்டுப் போரின் சேனைத் தலைவர். அவருக்குப் பக்கத்தில், நிழல் போல் அவரைத் தொடர்ந்து, ஜிப்பாவை யணிந்தவராய், மடிப்புக் கலையாத தூய அங்கவஸ்திரம் அணிந்தவராய்ப் பஞ்ச கச்சமாக வேஷ்டியுடுத்தவராய்க் கல் உருளையின் முன்னே நின்று இழுத்துச் செல்கின்ற முதல் உபசேனாதிபதியாம் ஸ்ரீ அப்பளாச்சாரியார் அவர்களையும் பார். அவர் இக் கல்லூரிக்கு இன்றியமையாத பேராசிரியர். அவருக்குப் பக்கத்தில் சரியான உயரமும் அதற்குத் தக்க பருமனும், இனிய முகமும், திருமண் விளங்கும் நெற்றியும் அன்பான பேச்சும் உடைய திருத்தகு திருவேங்கடாச்சாரியாரும், அவரது அன்பர் திருவாளார் சேஷகிரிராவ் நாயுடுவும் உப சேனாதிபதிகள் தாம். ஆங்கிலப் பேராசிரியர் ஸ்ரீகோபால கிருஷ்ணனும் அவருடைய உதவி ஆசிரியர்களும் உபதலைவர்களே. அவர்கள் வேறோரிடத்தில் மாணவ சேனையை நடத்திச் செல்வதைப்பார். எல்லோரையும் விட உயரமும் கம்பீரமான தோற்றமும் உடைய திரு. செல்லையா அவர்கள் தாம் தேகப் பயிற்சிப் பேராசிரியர். அவர் மிகவும் ஊக்கமுடன் உழைப்பதையும் பார்.

ராமு :—உங்கள் தமிழாசிரியர்கள் இதில் சேரவில்லையா?

அபி :—எங்கள் கல்லூரியில் தமிழாசிரியர்கள் இருவர் உளர். அவர்கள் ஸ்ரீமான் ஐயரும் திருவாளர் முதலியாரும் ஆவார்கள். இருவரும் இரு குன்று போன்றவர்கள். ஐயர் திருவண்ணாமலையாகச் செந்நிறமாய்க் காட்சியளிக்கிறார். முதலியார் நீலகிரி போல நீல நிறத்துடன் காட்சியளிக்கிறார். இருவரும் ஒன்று சேர்ந்து வேறொரு கல்லுருளையை இழுத்துக்கொண்டு மாணவர்கள் புடைசூழ வருகிறார்கள் பார். இருவரும் நடந்து வந்தாலே போதுமே. நிலம் சமமாகி விடுமே. வேறு மொழி யாசிரியர்களும் தரைநூல் சொற்பொழிவாளரும் புத்தக நிலையக் காப்பாளராம் பாலசுப்பிரமணியமும் இப் படையைச் சேர்ந்தவர்களே. ஒவ்வொருவரும் அவரவர்க்கு ஏற்பட்ட நேரத்தில் மாணவர் குழுவுடன் சேர்ந்து ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் உழைப்பார்கள்.

ராமு :—ஆஹா. அதிசயம்தான் மெச்சத்தக்க விஷயமே. இக் கல்லூரியில் முதியவரும் இளையவரும், ஆசிரியரும் மாணவரும், வேற்றுமையின்றி ஊக்கத்துடன் உழைக்கிறார்களே. புதுமையும் பழமையும் கலந்து ஒளி வீசிப் புதுக் கல்லூரியை இன்ப மயமாக்குகிறதைக் காண மிகமிக மகிழ்கின்றேன். இக் கல்லூரியில் படிக்கும் பேறுபெற்ற நண்ப, நீ பாக்கியசாலியே. போய் வருகிறேன். வணக்கம்.

அபி :—சலாம், போய்வா. மறுபடியும் சந்திப்போம்.

"காசியபன்"

சமுதாய உடலுழைப்புத் திட்டம்

(Community Project)

புதுக்கல்லூரி மாணவர்கள்

விளையாட்டு மைதானம் அமைக்க உழைத்தபோது ஊக்கம் ஊட்டப் பாடிய பாடல்கள்.

—: o :—

1.	வாரும்	வாரும்	நண்பரே	வன்மை	பெற்றி	லங்கிட
	சீரும்	பேரும்	பெற்றுமே	செங்நெ	றிக்கண்	திகழ்ந்திட
	காரு	லாவும்	குன்றெனக்	கறுத்து	நிற்கும்	குப்பையை
	ஏரு	லாவும்	இடமதாய்	என்றும்	நின்றி	லங்கிட
2.	ஒன்றாய்க்	கூடி	இழுப்பமே	உருண்டு	நீண்ட	உருளையை
	நன்றாய்	நம்மு	டம்பினில்	நல்ல	வியர்வை	சொரிந்திட
	என்றும்	என்றும்	இன்பமாய்	இலங்கு	கின்ற	இடமதாய்ச்
	சென்று	சென்று	ஆடவே	செம்மை	யாகச்	செய்வமே
3.	உழைத்து	நாமி	யற்றிய	உயர்ந்த	இந்தச்	செயலுமே
	பிழைகள்	பட்ட	கருத்தினைப்	போக்கி	நன்மை	ஆற்றுமே
	ஏழை	வேலை	யென்கிற	இழிவு	தன்னைப்	போக்குமே.
	ஊழை	வென்று	உயர்ந்திடும்	திட்டம்	ஓங்கச்	செய்யுமே.
4.	சாலை	செய்து	வீருடன்	சோலை	தன்னை	வளர்ப்பமே
	மேலை	யோர்கள்	வெட்டிய	மேன்மை	யான	குளங்களும்
	வேலை	செய்ய	விரும்பிய	வீர	முள்ள	மாணவர்
	காலை	மாலை	கனிவுடன்	கருத்து	ஊன்றித்	தோண்டுவர்
5.	விரும்பிச்	செய்யும்	உழைப்பினால்	விளையும்	நன்மை	பெரியதே
	அரும்பும்	பூவும்	அழகுற	அமைப்பம்	இந்தக்	காவினில்
	எறும்பு	போல	இருந்தவர்	இரும்பு	போன்ற	பலத்தினை
	வரம்பு	இன்றி	வாய்த்திடப்	பெற்று	வாழ்க	நிலத்திலே.

"பாஸ்கரன்"


CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

THE FILLED-UP TANK BEFORE ROLLING BY THE STUDENTS



OUR STUDENTS ENTHUSIASTICALLY ROLLING THE NEW PLAY GROUND



ANOTHER BATCH AT WORK

The Hon'ble Sri Manickavelu Naicker inaugurating the Street-cleaning Campaign at Tiruvanmiyur

Our Social Service League Street-cleaning at Tiruvanmiyur

பெரிய புராணம் காவியமா? புராணமா?

அமிழ்தினும் இனிய செந்தமிழ் நூல்களில் ஆன்றோர்களால் பெரிதும் பாராட்டிப் பேசப்படும் நூல்கள் பல. அவற்றுள் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் பாடியருளிய பெரிய புராணமும் ஒன்று. தண்டமிழில் மேலாந்தரமாயுள்ள நூல்கள் இன்னின்ன என உமாபதி சிவாசாரியார் பாடிய பாட்டில் இந்நூலை அழகுறச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்
தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்த வுரை—
ஒள்ளிய சீர்த்
தோண்டர் புராணம் தொகுசித்தி
ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்

என்பது அப்பாட்டு. தொண்டர் புராணம் என்பது பெரிய புராணம்.

இந்நூல் தலைசிறந்த நூல் என்பது இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்றாகத் திகழ்வதினின்றும் நன்கு புலனாகிறது. புற இருளைச் சூரியன் போக்குவது போல, அக இருளை இப்பெரிய புராணம் அகற்றவல்லது என்பதைப்

"பொங்கிய இருளை ஏனைப் புற இருள்
நீக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்
தொண்டர் புராணம் என்பாம்

என்னும் செய்யுளால் அறியலாம்.

இத்தகைய சிறப்புடைய நூலை யாத்த சீரியர் புகழ் செப்புந்தரமன்று. அச்சீரியர் யார் எனச் செப்ப வேண்டுவதுமின்று. அவரே தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானுவார் என்பதனைத் தொடக்கத்தில் சுட்டியுள்ளனன். சேக்கிழார் பெருமானுர் திருவள்ளுவரோடு ஒப்பவைத்துப் பேசப் புகும் பெருமை சான்றவர். திருவள்ளுவர் பெருமான் தெய்வப் புலவர் என்னும் பட்டம் பெற்றவர். அவரைப் போலவே சேக்கிழார் பெருமானும் தெய்வப் புலவர் சேக்கிழார் எனச் சிறப்பிக்கப்பட்டவர். திருவள்ளுவரையும் அவர் யாத்த திருக்குறளையும் சிறப்பித்து ஓதும் தனி நூல் திருவள்ளுவமாலை எனப்படும். அதுபோலவே சேக்கிழார் சுவாமிகளையும் அவர் செய்த நூலையும் புகழ்ந்து பேசும் தனிப் பெருநூல் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்பது. இப்புலவர் பெருமான் வரலாறு தனி நூலாகச் சேக்கிழார் புராணம் என்றே கூறப்பட்டு நடைமுறையில் இருந்து வருவதையும் நினைவு கொள்ளுவோமாக. இவ்வாறு தனிப்பட்ட நூலால் சிறப்பிக்கப்பட்ட பெருமை சான்றவர்கள் திருவள்ளுவரையும் சேக்கிழாரையும் தவிர வேறு புலவர்கள் எவரும் இலர். ஏனைய புலவர்களின் புகழ் தனியன்கள் என்னும் தனிப் பாடல்களால் மட்டும் சிறப்பிக்கப்பட்ட அளவில் நின்றுவிட்டது.

சேக்கிழார் பெருமான் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர். தில்லைவாழ் அந்தணர் மரபினரான உமாபதி சிவாசாரியார், "செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடிபோற்றி" என்று அவர் திருவடிகளைப் போற்றி நின்றதோடு அமையாமல் "திருத்தொண்டர் புராணத்தை அளவிட நம் சேக்கிழார்க்கல்லது தேவர்க்கும் அரிதே" என்றும்,

மதுரகவி ராமாயண கதைஉரை செய்த
வான்மீக பகவனும் ஒப்பல்லன்
விதிவழி பாரதம் உரைசெய்து முறை
செய்த வேதவியாதனும் ஒப்பல்லன்
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட்விசேடனும் ஒப்பல்லன்

பொதிய மலைக்குறு முனிவனும் ஒப்பல் லன் புகழ்புனை குன்றை முனிக்கென்பர். என்றும் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். வட நாற் கடலும் தென்னூல் கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான யோகிகள், சேக் கிழார் பெருமானைப் புகழ்ந்து பேசுகையில்,

வாக்கி னால்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கி யப்பய னைப்பதி குன்றை வாழ்
சேக்கி ழான்அடி சிந்தை இருத்துவாம்

என்றும் திருத்தொண்டை நன்னாட்டு நானி லத்தைத் திணைவளனும் தெளிவுறக் காட்ட மருத்தொண்டை வாய்ச்சியர் சூழ் குன்றை நகர்க்

குலக்கவியே வல்லன் அல்லால்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார் ?

எனத் தெரிந்து பேசினார். இங்ஙனம் அறிவுசான்ற அறிஞர் பெருமக்களால் போற்றப்படுவதற்குக் காரணம் சேக்கிழார் பெருமானிடத்து அமைந்து கிடந்த புல மைப் பெருக்கே என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். இஃது உண்மை என்பது, ஒருகால் அனபாயச் சோழ மன் னன் எழுப்பிய வினாக்களாகிய மலையை விடப் பெரியது எது? கடலைவிடப் பெரி யது எது? உலகைவிடப் பெரியது எது? என்பனவற்றிற்கு அவனது அவைக்களப் புலவர் பலரும் விடை இறுக்க விழித்த போது, சான்றோருடைத்துத் தொண்டை நன்னாடு என்பது உண்மையாயின், இவ் வினாக்கட்கு விடை காணட்டும் எனத் தொண்டைமானுக்கு இவற்றை அனுப்ப, அதுபோது அம்மன்னன் சேக்கிழாரை அழைத்து விடைகாணுமாறு வேண்ட, அவற்றிற்கு நேர்விடையாகச் சிறிதும் தட் டுத் தடங்கல் இன்றி,

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது,"

"காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்றுவிடை இப்புலவர் ஏறனார் இறுத்தமை யினின்று தெற்றத் தெளியக் காணலாம். இன்னமும் இவரது பெருமைகளைக் கூறிச் செல்லின் இவ்வேடு இடந்தராது பரக்கும் என்று கருதி இத்துடன் சுருக்கப்பட்டது. வேண்டுவார் அன்னார் நூலகத்துப் பரக்கக் கண்டுபரவசமுறுவார்களாக.

இனி அகன்ற ஞானமும் ஆழ்ந்த புலமை யும் வாய்ந்த அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான் பாடியருளிய நூல், புராணமா? அன்றிக் காவியமா? என்பதை ஈண்டுச் சிறிது ஆராய்வோமாக.

பெரிய புராணம் என்னும் பெருவழக்குப் புறச்சான்றாக இருக்கவும், தொண்டர் புரா ணம் என நூலகத்தே அகச் சான்றாக இருக்கவும், இத்தகைய ஆசங்கை எழக் காரணம் என்னை? எனச் சிலர், வினவலாம். ஆனால், பெரிய புராணப் போக்கையும் ஆசி ரியரின் உள்ளக் கிடக்கையையும் சிறிது ஊன்றிப் பார்ப்போமாயின் இந்நூல் காவி யமே என்பது தெற்றத் தெளியப்போதரும். புராணத்திற்கு இலக்கணம், புராணம் பஞ்ச லக்ஷணம் உணர்த்த வேண்டும் என்பது. அவையே உலக சிருஷ்டி, பிரதி சிருஷ்டி, மன்னர், முனிவர் வமிசக்கிரம வர்ணனம், மநுவந்தரம் என்பன. இவ்வைந்தும் இப் பெரிய புராணத்தில் இடம் பெற்றில, அங் ஙனமிருக்க, இஃது இப்பெயர் எதனால் பெற்றது எனின், "பழமை யுடையது" என்றும் பொருளை யுடைய புராணம் என் னும் சொல் இது குறிக்கப்பட்ட பெரியவர் களின் பழைய கதை என்னும் பொருளில் அமைந்துள்ளது என்பதனால் பெயர் பெற் றது என்பதை உணர்வோமாக. திருவா சகத்தில் 'சிவபுராணம்' என்னும் தலைப் பிற்கு முன்னோர் "சிவனது அநாதி முறை மையான பழமை" என்று பொருள் கூறி யிருப்பதிலிருந்து புராணம் என்னும் சொல்லின் உள் பொருளை அறிந்து கொள்க. இங்ஙனம் எடுத்துக்காட்டிய காரணங்களால் சேக்கிழார் செய்த நூல் பஞ்சலக்ஷணம் உணர்த்தும் புராணம் போன்ற புராணம் அன்று என்பதை அறிந்தனம். இனி இந்நூல் காவியமே என்பதற்குரிய காரணங்களைக் கவனிப்போ

மாக. இவ்வாறு ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னம் காவியம் இன்னது என்பதை அறிதல் மிகமிக இன்றியமையாததாகும்.

தண்டி ஆசிரியர் தம் தண்டியலங்கார நூலில் பெருங் காப்பியத்தின் இலக்கணத்தைப் பேசுகையில்,

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றி னொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்ற மென்றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவிகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும் பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப"

என்று கூறிப் போந்தார்.

தண்டமிழ் மொழிகளில் ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று கொங்குவேண் மாக்கதை என்பது. அதுபோலப் பெரிய புராணமும் காவியமுமாகிய ஒரு மாக்கதை என்பதை அறிவிக்கவே, சேக்கிழார் பெருமான் "எடுக்கு மாக்கதை" என்று பாடத்தொடங்கினர். பெரிய புராணத்தின் முதற் செய்யுள் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டுத் தொடங்கப்பட்ட பாடல்,

"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்பது.

இப்பாடலில் வாழ்த்து வணக்கம் வருபொருள் அமையப் பெற்றிருத்தலைக் காணலாம். "வாழ்த்தி" என்னும் சொல் வாழ்த்தையும் வணங்குவோம்" என்னும் மொழி வணக்கத்தையும், இங்ஙனம் வாழ்த்தி வணங்கியதன் நோக்கம் தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுதல் வேண்டும் என்னும் குறிக்கோளுடன், வாழ்த்தியும் வணங்கியும் இந்நூலைத் தொடங்குகிறார் ஆதலின், செயப்படு பொருளும் கூறப்பட்டுள்ளதை உய்த்து உணர்வோமாக. மேலும், அடியார் பெருமையைக் குறிக்கோளாகக் கொண்டு பாடினர் எனினும் செயப்படு பொருள் தோற்றம் அளித்தலை எளிதில் உணரலாம். அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய இவற்றின் பயனைத் தருவதே நூல் என்பதற்கும் போதிய ஆதாரங்கள் இந்நூலகத்துள. இந்நூலில் கூறப்படும் அடியார்கள் பலர் பெறுதற்கரிய பேறு பெற்றமைக்கு அவர்கள் மேற்கொண்ட அறமே என்பது தெற்றத்தெளிந்த செய்தியாகும். திருஞான சம்பந்தர் திருமயிலைப் பூம்பாவையை என்பாக இருந்த நிலையில் இருந்து எழுப்பிய காலத்தில், அறத்தின் மீது ஆணையிட்டே எழுப்பினர்.

"மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுது செய்வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்".

என்று கூறியதும் பூம்பாவை உயிருடன் எழுந்தனள் என்பதை உணரும்போது அறத்தின் பயன் அறிவிக்கப்படுகிறது.

பொருட்பேறு பெறுதலைக் குறித்து இந்நூலில் பல சான்றுகள் பரந்து கிடக்கின்றன. என்னப்பன் என்னைப்பாடினன்; சம்பந்தன் தன்னைப் பாடினன்; சுந்திரன் பொன்னுக்குப் பாடினன்; என்னும் வழக்கு மொழிகளில் சுந்தரன் பொன்னுக்குப் பாடிய பொன்னும் மணியும் பெற்றதை

அன்னார் வரலாற்றில் பல்வேறு இடங்களில் நன்கு உணரலாம். நிதியின் குவையும் உடன் கொண்டு நிறையும் நதியும் குறை மதியும் பொதியும் சடையார் திருப்பனையூர் புகுவார் புரி நூல் மணிமார்பர்" என்பது வன்றொண்டர் திருப்புகலூரில் பெற்ற பொருட்பேற்றை உணர்த்துவதாகும்.

இன்பச் செய்திகளும் இந்நூலில் ஏற்ற இடங்களில் இடம் பெற்றுள்ளன. சுந்தரர் பரவையாரை மணந்து இன்பத்தில் திளைத்து விளையாடியதைக் கவிஞர் பெருமானார் குறிப்பிடும் பகுதிகள் கழிபேர் இன்பம் தருவனவாகும்.

பண்ணுதமிழ்த் தொடை மாலை பலசாத்திப் பாவை யென்னும், மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார்" என்னும் அடிகளில் இக் கருத்துக் குறிக்கப் பட்டிருப்பதைக் காண்க.

வீட்டின் சிறப்பினை இப்பெரிய புராணம் இயம்புமே என்று எண்ணுவதும் ஒரு வியப்பேயாகும். இந்நூலில் காணும் அடியார்கள் தம் வாழ்நாள் இறுதியில் எய்தியபேறு இவ் வீட்டின்பப்பேறேயாகும்.

வானவர் பூவின்மாரி பொழிய மாமறைகள் ஆர்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நல்மிகு சிவலோகத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட் டுடன்உறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத்தாரும் வானிடை இன்பம் பெற்றார்.

என்பது வீடு பேற்றின் இயல்பை இயம்பிய வாறாயிற்று.

தன்னேரில்லாத் தலைவன் காவியத்திற்கு ஒரு சிறிய உறுப்பினன் ஆவன் பெரிய புராணத்தின் தலைவர் யாவர்? என வினவலாம். பெரிய புராணத்தில் அறுபான் மும்மை அடியார்களது வரலாறுகள் கூறப் பட்டனவேனும் தம்பிரான் தோழரே இக் காவியத்தின் தம் நேர் இல்லாத் தலைவராவர். அவரே தலைவர் என்பதைத் தம் நுண்ணறிவுத்திறனால் தொண்டர் சீர் பரவுவாராம் சேக்கிழார் பெருமானார் கூறாமல் கூறியுள்ளார்.

சுந்தரரது வரலாற்றை ஆதிகயிலாய மலையினின்று தொடங்கித் தடுத்தாட்கொண்ட புராணத்தும் ஏயர்கோன் கலிக்காமர் நாயனார் புராணத்தும் கழறிற்றறிவார் நாயனார் புராணத்தும் இணைத்து இறுதியில் வெள்ளையானைச் சருக்கத்தில் முடித்துக் காட்டியதிலிருந்து அவரது உட்கிடையினை ஐயம் திரிபற அறியலாம். இத்துடன் கூறியதோடு அமையாமல் சருக்கங்கள் முடியும் தோறும் ஆளுடைய நம்பிகட்கு வணக்கச் செய்யுட்களை வழங்கிச் சென்றதினாலும் நன்கு உணரலாம். இங்ஙனம் வாழ்த்தியும் வணங்கியும் சென்றதன் நோக்கம், ஆளுடைய நம்பிகளது காவியத் தலைமை இந்நூலில் இடையறாது இயைந்து வருதற்கே என்க.

சுந்தரமூர்த்திகள் பிறப்பிடம் வேறு, வளர்ப்பிடம் வேறு. என்றாலும், தம் திருமணத்தை முடித்து நிலையாக வாழ்ந்த இடம் திருவாரூரேயாகும். அதனால் தாம் தம்பிரான் தோழர் எங்குத் தலயாத்திரை செய்யினும் மீண்டும் திருவாரூர் வந்தே தங்குவார் ஆயினர். இந்தக் காரணங்களை மனத்தில் கொண்டு தம் நூலின் தம் நேரில்லாத் தலைவர் வாழ்ந்த இடமாகிய திருவாரூரையே சிறப்புக் கூறுதற்குரிய நகரமாக அமைத்துக் கொண்டார் கவிவாணர். மேலும் சுந்தரரே இந் நூலுக்குத் தம் நேரில்லாத் தலைவர் என்பது பல்லாற்றானும் விளங்கும். இவர் பெருமிழலைக் குறும்பரென்னும் பரம யோகியால் பூசிக்கப்பெற்ற பெரும் பேறு பெற்றவர், இதனை அறிந்தே கற்பனைக் களஞ்சியமாம் சிவப்பிரகாச சுவாமிகள், "பெருமிழலைக் குறும்பனெனும் பரமயோகி பெரிது வந்துன் திருவடித் தாமரையைப் போற்றி விரைமலர்தூய் வந்தனை செய்கின்றான்" என்று இவரைத் துதிப்பாராயினர். சுந்தரர் இறைவனார்க்குத் தோழர் என்பதாலும், தம்மைத் தம்பிரான் தோழர் என்று தரணி சாற்றுதலாலும் நன்கு உணரலாம். இறைவரே இவரது பெருமை

களைப் பற்றிச் சங்கிலியாரிடத்தில் பேசுகையில்,

"சாருந்தவத்துச் சங்கிலிகேள் சால
என்பால் அன்புடையான்
மேருவரையின் மேம்பட்ட தவத்தான்
வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான் ஆள உரியான்"

என விதந்து கூறுவாராயினர். இங்ஙனம் பல எடுத்துக் காட்டுகளால் சுந்தரர் பெரிய புராணத்திற்குத் தம் நேர் இல்லாத்தனிப் பெருந்தலைவர் என்பது நிலை நாட்டப் படலாம்.

தம்பிரான் தோழர் இக் காவியத் தலைவராயின், தலைவி, யார்? என்பதையும் ஈண்டே நிலைநிறுத் வேண்டியவராகின்றோம். தம்பிரான் தோழர்க்கு வாழ்க்கைத் துணைவியராக அமைந்தவரே காவியத் தலைவி யார் ஆதற்கு உரிமையுடையவராவர். அற்றாயின், சுந்தரர் வாழ்க்கைத் துணைவி யார் யாவர் என்பதனை ஆராய்ந்து முடிவு கட்டுதல் வேண்டும். நம்பியாரூரர்க்கு வாழ்க்கைப்பட்டவர் மூவர். முதலாக அமைந்தவர் புத்தூர் சடங்கவி சிவாசாரியார் திருமகளார். ஆனால் இவ்வம்மையார் திருமணப்பந்தலில் கேளும் கிளேயும் அழகுறக் கண்டுகளிக்கும் நிலையில சுந்தரர் பக்கலில் அமரும் பேறு பெற்றனரே அன்றி, அவரால் மங்கல நாண் பூட்டப்பட்டுத் திருமணத்தினை முற்றும் முடித்து இன்புற இல்லறத்தை நடத்தும் பேறு பெற்றிலர். காரணம் ஆண்டு இறைவர் போந்து அம் மணம் முற்றுறுவகையில் தடை செய்தனர். ஆகவே இவ் வம்மையார் சுந்தரர் வாழ்க்கைத் துணைவியார் என்று கூறுதற்கு உரியர் ஆகார். மூன்றாவதாக வாழ்க்கைப்பட்டவர் திருவொற்றியூர் சங்கிலி நாயச்சியார். இவரை மணந்தது உண்டு. ஆனால், முற்ற முடிய அவ்வம்மையாருடன் ஆளுடைய நம்பிகள் வாழ்க்கை நடத்தியவர் அல்லர். அவ்வம்மையாருடன் வாழ்வு நடாத்திய காலம் ஒரு திங்களாக இருக்கலாமோ, அன்றி இரு திங்களாக இருக்கலாமோ என்ற ஐயம் எழுகின்றது. காரணம் என்னையோ எனில் சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாருடன் வாழ்ந்தபோது, அன்னார் திருவாரூர் தியாகேசப் பெருமானைக் காணாது இருந்தமை குறித்துவருந்திப் பாடுகையில்', 'முத்தினை மாமணி தன்னைவயிரத்தை மூர்க்கனேன் எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே" என்று உளம் கனிந்து பாடுகிறார். அப்படிப்பாடியவர் ஒற்றியை விட்டு உடனே திருவாரூர் நோக்கிப் புறப்பட்டும் விடுகிறார். எனவே சங்கிலியாரையும் இவரதுஇல்லறத் துணைவியாராக ஏற்க இசைதற்கு ஏது இல்லை. அற்றாயின் இவரது வாழ்க்கைத் துணைவியார்தாம் யாவர்? இல்லற மாதரார் தாம் எவர்? எனில் கூறுதும். இவரது உள்ளங் கொள்ளைகொண்ட மாதரார், திருவாரூர்ப் பரவை நாய்ச்சியார் ஆவார். இவ்வம்மையாரையே சுந்தரர் தம் வாழ்க்கைத் துணைவியராகக்கொண்டவர். புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் திருமகளாரை மணக்கும் வாய்ப்புப் பெறாது தடைப்பட்ட பின் பரவையாரையே மணக்கும் பேறு இவர்க்குக் கிடைத்தது. இவரை மணந்த பின்பே, இவரது தல யாத்திரையில் திருவொற்றியூர்ச் சங்கிலியாரை மணக்க நேர்ந்தது. பரவையார் உள்ளமும் நம்பியாரூரர் உள்ளமும் காதலால் ஒன்று பட்டதுபோல ஏனைய இருவரது உள்ளங்களும் ஒன்று பட்டில. திருவாரூரில் முதல் முதல் பரவையாரைச் சுந்தரர் பார்க்கின்றனர். அப்படிப்பார்த்த போதே அவர் அவ்வம்மையார் மீது காதல் கொண்டுபாடியபாடலும் இவரைப் போலவே அவ்வம்மையார் கூறிய பாடலும் இருவரது உளம் ஒத்த காதல் உணர்ச்சியினைத் தெற்றத் தெளியக் காட்டுவன வாகும்.

"கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்
தன் பெருவாழ்வே!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணிய
மோ! புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்
கொடியோ.
அற்புதமோ! சிவனருளோ! அறியேன்
என் றதிசயித்தார்"

என்பது சுந்தரர் பரவையாரைக் கண்ட
போது பாடிய பாடல்.

"முன்னே வந்தெதிர் தோன்றும் முருக
னோ! பெருகொளிபால்
தன்னேரில் மாரனோ! தார் மார்பில் விஞ்
சையனோ!
மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்ய
ருள் பெற் றுடையவனோ!
என்னே! என் மனம்திரித்த இவன்யா
ரோ! என நினைந்தார்"

என்பது பாவையார் நம்பியாரூரைக் கண்டபோது பாடிய பாட்டாகும். இவ்வாறு மனம் ஒத்த இத் தம்பதிகள் தம் இல்லறத்தை இறையவன் அன்பில் குறையாது நடத்தி வந்தனர். இதனைப் புலவர் பெருமான்,

"தன்னையா ளுடையபிரான் சரணாரவிந்த
மலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத்
திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப்
பாவையென்னும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச்
செல்கின்றார்"

என்று பாடி மகிழ்ந்தார். எனவே பெரிய புராணமாம் இப் பெருங் காப்பியத்திற்குப் பாவையார் கதாநாயகியாராகவும், நாவலூரின் பெருமான் கதாநாயகராகவும் திகழ்கின்றனர்.

தண்டியலங்கார ஆசிரியர் காவியத்தின் இலக்கணம் இன்னது எனக் கூறிய ஏனைய பகுதிகட் குரிய அமைப்புக்கள் அத் துணையும் பெரிய புராணத்தினின்று எடுத்து மொழியத் தகுந்த அளவுக்கு உள்ளன. அவற்றை மற்றுமொரு முறை தொடர்ந்து எழுதி ஒரு முடிவுக்கு வருவோமாக. இது காறும் கூறிய அளவில் பெரிய புராணம் பெருங் காவியமே என்பதில் எள்ளளவும் சந்தேகம் எழ இடம் இல்லை அன்றோ?

வித்வான் பாலூர்
கண்ணப்ப முதலியார்

"நீதிமன்றத்தில் நிகார்"

இருள் சூழ்ந்த நடுநிசி. வீட்டின் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான், அப்பாஸ். யார் இந்த நடுநிசியில் நல்ல தூக்கத்தில் இருக்கும் என்னை எழுப்பியது என்று வேதனையோடு வந்து கதவைத் திறந்தான். தூக்கத்திலிருந்து எழுந்த அப்பாஸை வெறுப்பும், வேதனையும் ஏன் முற்றுகையிடவேண்டும்? தந்தை ஒருபுறம் திணறிக் கொண்டிருந்தார். தாய் மற்றொருபுறம் தந்தையின் நிலையைக் கண்டு வருத்தமுற்றவளாய்க் காணப்பட்டாள். இந்நிலையில் அப்பாஸின் நண்பன் கொண்டு வந்த செய்தி அவனை ஆஸ்பத்திரிக்கு விரையும்படி தூண்டிற்று. அன்று இரவு ஏதோ அவசரக் கேஸுக்காக டாக்டரும் நர்ஸும் அயலூர் சென்றிருந்தனர். அப்பாஸ் வீடு திரும்புமுன் அவனது பெரிய தாயார் இரு ஆண் குழந்தைகளை ஈன்றெடுத்தாள். இயற்கையின் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றோ! சிறிது நேரத்திற்கெல்லாம் சின்னஞ்சிறு குழந்தைகளைத் தவிக்க விட்டுவிட்டு விண்ணுலகுக்கு வழி தேடிச் சென்று விட்டாள் அக்குழந்தைகளின் அன்னை.

அப்பாஸின் தந்தை அப்துல்லா வயிற்று வலியின் வேதனையைப் பொறுக்கமாட்டாதவராய்க் குடும்ப பாரம் என்னும் அப்பொறுப்பை ஏற்று நடத்துவதில் இன்னல் நிறைந்தவராய், வாழ்வுப் பாதையில் எப்படி வெற்றி காண்பது என்ற சிந்தனைப் புயலில் சிக்கித் தவித்தவராய்க் காணப்பட்டார்.

அதுமட்டுமின்றி இவ்விரு குழந்தைகளைத் தன்னருமை மனைவி நிகாருன்னிஸா நல்ல முறையில் வைத்துக் காப்பாற்றுவாளா அல்லது அவைகளின் வாழ்வில் இன்னல்தான் என்றென்றும் இடம் பெறுமா என்ற சிந்தனையிலும் ஆழ்ந்தார் அப்துல்லா.

குழந்தைகள் இரண்டும் நிகாரின் மடியில் தவழ, அப்பாஸ் அவளருகில் அமர்ந்து, "என்னம்மா யோசிக்கிறாய்!" இக்குழந்தைகள் "நல்வாழ்வை எட்டிப்பிடிக்கப் போகிறார்களா அல்லது நசித்துப் போகத்தான் இந்நாதியற்ற உலகில் பிறந்திருக்கிறார்களா என்று எண்ணுகிறாயோ" என்றுகேட்டான்.

"ஏன் அப்பா இப்படிக் கேட்கிறாய்?" நீ ஒன்றும் அறியாதவன். எனினும் உனது நுண்ணறிவைப் பயன்படுத்தி நுணுக்கமான கேள்வியைத்தான் கேட்டிருக்கிறாய். இதே கேள்வியை உன் தந்தையாவது அல்லது வேறு யாராவது கேட்டிருந்தால் என் மனம் என்னபாடுபட்டிருக்கும்!

"அப்பாஸ்! நான் இப்போது சொல்லப் போவது உனக்கு நன்றாகப்புரியும் என்று நினைக்கிறேன். உலகில் உள்ள மாற்றாந் தாய்களைப்பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் அல்லவா? நீ கூட அடிக்கடி என்னிடம் வந்து என் நண்பன் ஒருவன் என்னோடு சேர்ந்து வாசிக்கிறான். அவன் தாயற்றவன். அவனது சிற்றன்னை புரியும் கொடுமைகட்கு அளவேயில்லையாம். அவன் உன்னிடம்தான் தனது குறைகளையெல்லாம் எடுத்தியம்பி ஒருவாறு நிம்மதியடைவானும் என்று சொல்வாயே. அத்தகைய மாற்றாந் தாய்களின் பட்டியலில் என் பெயர் இடம் பெறாதிருக்க வேண்டுமென்று அல்லும் பகலும் இறைவனிடம் வேண்டுகிறேன்", என்று கூறி முடித்தாள், நிகார்.

அப்பாஸ் தனது அன்னை கூறியவற்றைச் செவிமடுத்த பின்னர் வெளியே சென்று விட்டான்.

வருடங்கள் பல உருண்டோடின. குழந்தைகளும் வினைத்தெரியும் வயதை யடைந்தனர். அப்துல்லாவுக்குத் தன் பிள்ளை அப்பாஸை அழைத்துக்கொண்டு அயல் நாடு சென்று பொருள் ஈட்டவேண்டுமென்ற எண்ணம் வெகு நாட்களாக இருந்துவந்தது. அவ்வெண்ணம் விரைவில் ஈடேறும் என்று எண்ணிக் கொண்டிருந்தாரேயொழிய அதுஎளிதில் முடிவதாயில்லை. அப்பாஸ் ஆறுவது பாரம் வரையில் படித்துத் தேறியுமிருந்தான். உள்நாட்டிலேயே ஏதாவது வேலை கிடைத்தால் நலமெனக் கருதினான். ஆனால் அயல் நாடு செல்லவேண்டும் என்ற விதியிருந்ததுபோலும்! பலநாள் முயற்சிக்குப் பின்னர் ஒரு நாள் அப்துல்லா, அப்பாஸை அழைத்துக்கொண்டு இரங்கூனுக்குப் பயணமானார்.

இரங்கூனில் இவர்கள், வாழ்க்கையை இன்பமாகக் கழித்து வந்தார்கள். அயல் நாட்டிலிருந்துவந்த இவர்கட்குப் புகலிடம்தந்த இப் புதுநகரம் பொருளாதார நிலையிலும் இவர்களைக் கைதூக்கிவிட்டது. மாதாமாதம் அப்துல்லா அனுப்பும் மணியார்டரைப் பெறுவதில் அளவற்ற ஆனந்த மடைந்தாள் நிகார். பையன்களின் நலங்குறித்து அடிக்கடி கடிதம் எழுதுவதில் அப்துல்லா அக்கரையோடு இருந்துவந்தார். இங்கிருந்தும் நற்செய்திகளைத் தாங்கிய கடிதங்கள் அடிக்கடி இரங்கூனுக்குச் சென்றவண்ணமேயிருந்தன.

இதற்கிடையில் அஷ்ரபும், அஸியும் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடிக்குந் தறுவாயில் இருந்தனர்.

அன்று ஒருநாள் அஷ்ரப், தாயொடு அறுசுவைபோம், தந்தையொடு கல்விபோம், சேயொடு தான்பெற்ற செல்வம்போம், என்று படிக்கவாரம்பித்தான். இவன் இதைப் படித்து முடித்த பின்னர், நிகார் அப்பையன்களைச் சாப்பிட வழைத்தாள். என்ன ஆச்சர்யம்? அப்பையன் படித்ததற்கு மாறாக அறுசுவை உண்டிகளும் அவர்கட்குப் பரிமாறப்பட்டிருந்தன. காலப்போக்கில் இக் குழந்தைகளின் முன்னேற்றத்தில் நிகார் காட்டிவந்த அக்கரைக்கு அளவேயில்லை. அளவற்ற அன்பும் அப்பையன்கள்பால் பொழியப்பட்டது. நிகாரின் போக்கு அப்பையன்களின் நிதானத்தை

இழக்கச் செய்தது. மாற்றாந்தாயானவள் தன் சக்களத்திப் பிள்ளைகளிடம் இவ்வளவு அன்பு செலுத்துவதைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே என எண்ணி வியந்தார்கள். இவ்வளவு உள்ளன்போடு போற்றிப் பாதுகாக்கும் நிகாரினிடத்து அஷ்ரபும், அலியும் பேரன்பு செலுத்தி வந்தார்கள் என்றால் ஆச்சர்யமில்லை யல்லவா?

அப்பையன்கள் இருவரும் தந்தைக்குப் பின்வருமாறு குதூகலச் செய்தியனுப்பினர்.

"அன்புள்ள தந்தைக்கு அஸ்ஸலாமு அலைக்கும்.

தாயில்லாக் குழந்தைகளை வைத்துக் கனிவுடன் பராமரிப்பதற்கு ஒருவரும் இல்லையே என்று கவலையுறுதீர்கள். பெற்ற அன்னையின் அன்பு இப்படித்தான் இருக்குமா என்றும், ஒருகால் அவ்வன்னை தன் குழந்தைகள்பால் இவ்வளவு அன்பு செலுத்துவாளா என்றும் ஐயுறும் அளவுக்கு எங்களை ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைக்கச் செய்யும் அன்னையை நாங்கள் பெற்றிருக்கிறோம். எங்களைப்பற்றி நீங்கள் யாதொரு கவலையுமுறவேண்டாம். ஈன்ற கன்றின்மீது தாயன்பு செலுத்தும் பசுவைப்போல எங்களை அடிக்கவேண்டிய காலத்தில் அடித்தும் கண்டிக்கவேண்டிய காலத்தில் கண்டித்தும் நற்பாதையில் திருப்புகின்றாள் எங்கள் மாற்றாந்தாய், சொந்த அன்னையைவிட ஒருபடி உயர்ந்த முறையிலேயே வெள்ளை உள்ளத்தோடு கூடிய இவ்வன்னை உலகத்தாரால் அளிக்கப்பட்டிருக்கும் மாற்றாந்தாய் என்னும் கருப்புப் போர்வையைக் கிழித்தெறியப் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நாங்கள் உங்கட்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறோம். அண்ணன் அப்பாஸ் அவர்களின் நலமறிய விழைகிறோம் என்றெழுதி அவ்விருவர்களும் அக்கடிதத்தில் கையொப்பமிட்டனுப்பினர்.

இக்கடிதத்தைக் கண்ட தந்தை சந்தோஷமடையாமல் என்ன செய்வார்? ஆனந்தக் கண்ணீர் வடிக்கத் தொடங்கினார். தன் மனையாளுக்கு யாதொரு குறையும் ஏற்படாதிருக்கவேண்டுமென்று ஐந்து வேளையும் ஆண்டவனைத் தொழுது ஆசேட்ட வண்ணமிருந்தார் அப்துல்லா. பையன்களுக்குப் பலாகப் புத்தகங்களும், சப்பாத்துக்களும், துணிமணிகளும் அனுப்பி வைத்தார், அப்துல்லா.

அப்துல்லா பல கடிதங்கள் எழுதியும் பதிலைக்காணாது வருந்தினார். (அப்பையன்கட்கு) அடிக்கடி என்ன குறை இருக்கிறது தங்களது தந்தைக்குக் கடிதம் எழுதியவண்ணமிருக்க இரங்கூனுக்கு நிகார் கடிதம் எழுதியிருப்பாள் என்று அப்பையன்கள் எண்ணியிருக்க, அப்பையன்கள் கருதியது போன்று நிகாரும் கருதியதாலேயே கடிதப் போக்குவரத்து நின்றுவிட்டது.

சின்னாட்களுக்குப் பின்னர், "நிகார் என்னும் பெண், ஒருத்தி இரு பையன்கட்கு விஷமிட்டுக் கொன்றுவிட்டாள். மேற்படி வழக்கு கோர்ட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று பத்திரிகையில் படிக்க நேர்ந்தது. அப்துல்லாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. (இரங்கூன் நகரமே சுழல்வதுபோல் இருந்தது) அவர் அப்படியே சுருண்டு கீழே விழுந்தார். உடைந்த உள்ளத்தோடு தந்தையும் மகனும் நாடு திரும்ப எண்ணிக் கப்பலுக்கு உடனே பிரயாணச் சீட்டு வாங்கினார்கள். இவர்கள் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கையில் காற்றும் மழையும் தொடங்கிவிட்டன. குறித்த நேரத்தில் கரைசேர வேண்டிய கப்பல் கொந்தளிப்பின் இடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. மாலுமி கப்பலை அடக்கி ஆள இயலாதவனாய்க் காற்றடிக்கும் திசையைநோக்கிக் கப்பலைச் செலுத்தினான். பல நாள் பிரயாணத்திற்குப் பின்னர் கப்பல் ஏதோ ஒரு தீவில் வந்தொதுங்கியது. அவர்கட்குப் பசிமேலிட்டது. பக்கத்திலிருந்த உணவு விடுதிக்குச்சென்று உணவருந்திக் கொண்டிருக்கையில், அங்கே சிலர் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தார்கள். "யாரோ நிகார் என்பவளாம், அவன் இரண்டு பையன்களை விஷமிட்டுக் கொன்றுவிட்டாளாம். அவளை இன்று மாலை ஆம்பூர் நீதி மன்றத்தில் விசாரிக்கப் போகிறார்கள்." இதைக்கேட்ட அப்துல்லா உடனே அவ்

விடத்தை விட்டு அகன்று ஆம்பூருக்கு விரைந்தார். அங்கிருந்து முப்பது கல் தொலைவில் உள்ள அவ்வூரை அன்றுமாலை ஐந்து மணிக்கே அடைந்துவிட்டார், ஆம்பூர் என்பது இவரது சொந்த ஊராகிய பட்டியங்தொட்டிக்குப் பக்கத்து நகரமாகும். பேய்பிடித்தவர்போல் " இச் சண்டாளிக்கு நீதிமன்றம் தேவையில்லை. இதோ நான் இருக்கிறேன் அவள் உயிரைப்போக்க" என்று கத்திக்கொண்டு நீதிமன்றத்தை நோக்கி ஓடினார்.

என்ன ஆச்சர்யம்! குற்றவாளிக் கூண்டில் நிற்பவள் தன் அருமை நிகார் அல்லவென்பதை யறிந்த அப்துல்லா அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அப்துல்லாவின் அருமைக் குழந்தைகளும் அவ்விசித்திர வழக்கைக் காண வந்திருந்தனர். தன் இரு செல்வங்களையும் கட்டித் தழுவி முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தார் அப்துல்லா. அனைவரும் பட்டியங்தொட்டிக்கு ஒரு வண்டி வைத்துக்கொண்டு புறப்பட்டனர். வழிநெடுக இவ்விரு கொலைகளைப்பற்றி அஷ்ரப் தன் தந்தையிடம் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.

நம்மூரில் பக்கத்துத் தெருவில் அஹமது என்பவர் உங்களைப்போன்று மறுமணம் முடித்துக்கொண்டார். அதில் ஓர் ஆச்சர்யம் என்னவென்றால் அவள் பெயரும் நிகாருன்னிஸா. எங்களைப்போன்ற இருவரை வளர்க்கும் பொறுப்புடையவளாய் இருந்தாள் அந்த நிகாரும். எல்லாச் சிற்றன்னைகளும் என் அருமை அன்னையைப்போல் இருப்பார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? உண்மையான மாற்றாந்தாயின் உருவெடுத்து விளங்கினாள் அவள். அஹமதுக்குரிய ஐந்து ஏக்கர் நிலமும் தன் ஒரே குழந்தையாகிய உஸ்மானுக்கு உரித்தாக வேண்டுமென்ற எண்ணமே அவளை அவ்வாறு செய்யத் தூண்டிற்று என்று கூறி முடிப்பதற்குள் வண்டி வாயிற்படியில் வந்து நின்றது. எல்லோரும் வண்டியை விட்டிறங்கி நிகாரை தரிசிக்கச் சென்றனர். நிகார் அப்போது 'இஷா' தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருந்தாள். தொழுது முடிந்த பின் நிகாரைக் கண்ட அப்துல்லா........? இந்நிகாரின் வாழ்க்கைக் குறிப்பு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு மாற்றாந்தாய் உலகுக்கு நல்ல பாடம் கற்பிப்பதாய் அமைந்துள்ள தென்பதில் ஆச்சர்யமில்லை யல்லவா?

எஸ். அப்துல் ஸலாம்,
I. (வகுப்பு)

" மூன்று "

நாம் மூன்று பேராக வெளியே எங்காவது சென்றோமானால், செல்லும் காரியம் தடைபடும் என்று சிலர் கூறுகின்றார்கள். இப்படி இந்த மூன்றைக் குறை கூறுபவர்கள் அது எந்த விதத்திலும் எல்லா வகையிலும் முக்கியம் வாய்ந்தது என்பதைக் கவனிக்க மறந்து விடுகின்றார்கள். மூன்று எல்லா வகையிலும் எவ்வாறு முக்கியம் வாய்ந்தது என்பதை ஈண்டு கவனிப்போமாக.

முதற் கண் மிக மிகத்தொன்மை வாய்ந்த காலத்தில் தோன்றியது "தமிழ் என்பது, நாம் யாவரும் அறிந்ததே. அத்தகைய சிறப்புடைய "தமிழ் மூன்று எழுத்துக்களால் ஆனசொல்லாகும். பின்பு தமிழர்கள் தமிழை—இயல், இசை, நாடகம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர், தமிழரசர்கள் சிறப்புடையோர் பலர் இருப்பினும், மிகவும் முக்கியம் வாய்ந்த மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று வம்சத்தினர். தமிழர்கள் தங்கள் வாழ்விலேயே இருகண்களாகப் போற்றி வந்தவை காதலும் வீரமும் ஆகும். அந்த இரு சொற்களும் (காதல், வீரம்) மூன்று எழுத்துக்களால் ஆனவையே. தமிழ்மறை தந்த திருவள்

ளுவர் இயற்றிய "குறள்" மூன்று எழுத்துக்களால் ஆனதே. ஆயினும் நாம் திரு" என்னும் அடைமொழியைச் சேர்த்துத் திருக்குறள் என்று கூறுகின்றோம். தாம் இயற்றிய திருக்குறளைக் கூடத் திருவள்ளுவர் மூன்று பால்களாகப் பிரித்துள்ளார். அவை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் என்பன. இன்பத்துப்பாலைக் காமத்துப்பால் எனக் கூறுவாரும் உளர். ஆக திருவள்ளுவர் கூட அறம் பொருள், காமம் என்னும் மூன்று எழுத்துக்களால் ஆன சொற்களாலேயே மூன்று பிரிவாகப் பிரித்துள்ளார்.

பின்பு கடவுளைப்பற்றின செய்திகளை நோக்குமிடத்து அவற்றிலும் "மூன்று" முக்கியம் வாய்ந்துள்ளது. முக்கியம் வாய்ந்த தெய்வங்கள் மூன்று. அவை சிவன், (திருமால்) விஷ்ணு, பிரும்மா என்பவர்கள். "சிவன்" மூன்று எழுத்துக்களால் ஆகியது. அக் கடவுளுக்கு இருக்கும் கண்கள் "மூன்று". சிவனுடைய அடியார்கள் தங்கள் நெற்றியிலே திருநீற்றினால் மூன்று பட்டைகள் தீட்டிக்கொள்வார்கள். சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து "மூன்று" நகரங்களை எரித்த காரணமாக அவர் "முப்புரம் எரித்த முதலோன்" எனப் பெயர் பெற்றார். திருமாலை வைணவர்கள் "விஷ்ணு" என்று மூன்று எழுத்தால்அழைத்து "நாமம்" என்று மூன்று எழுத்தால் அமைக்கப்படும் மூன்று கோடுகளைத் தங்கள். நெற்றியில் தீட்டிக்கொள்கின்றார்கள். பழந்தமிழன் "அழகு" என்னும் மூன்று எழுத்துக் சொல்லை "முருகு" என்னும் மூன்று எழுத்துச் சொல்லுடைய தெய்வமாக்கி வணங்கினான்.

இன்று இந்த விஞ்ஞான உலகிலேயே "ரேடியோ, தந்தி, சினிமா" முதலிய மூன்று எழுத்துச் சொற்களால் ஆன பல கருவிகள் உள்ளன. திரைப் படக் (சினிமா) கொட்டகையில் இருக்கும் அறிவிப்பில் கூட "மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு டிக்கட் வாங்கவேண்டாம்; என்று உள்ளது. இன்றும் நாம் பல தலைவர்களை " படேல், பாரதி. வ. உ. சி." என மூன்று எழுத்துச் சொல்லினால் அழைக்கின்றோம்.

குழந்தை தவழ்ந்து விளையாடி, தத்தி நடந்து சென்று, தன்னைப் பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்த தாயைப்பார்த்து "அம்மா" என்ற மூன்று எழுத்துச் சொல்லால் அழைக்கும்பொழுது, அந்தத் தாயின் முகத்திலே "அன்பு" என்னும் மூன்றெழுத்துத் தெய்வீகச் சக்தி, அன்னை குழந்தைக்கு அளிக்கும் முத்தத்தின் வாயிலாக வெளிப்படுகிறது. நமக்கு இருப்பது "உயிர்" என்னும் மூன்றுஎழுத்துச்சொல். அது (உயிர்) இயங்க, இயக்க உதவி செய்வது "சக்தி" என்னும் மூன்று எழுத்துச் சொல். அவ்வுயிர் தங்கியிருக்கும் "உடல்", என்பதும் மூன்று எழுத்துச்சொல்லே.

இதை எழுதி விட்டு நிமிர்ந்த பொழு "கா....கா...கா" என்று மூன்று முறைகாகத்தை அழைக்கும் ஒரு திரைப்படப்பட்டு காற்றின் வழியே என் காதில் ஒலித்தது. மணியைப் பார்த்தேன். மணி "மூன்று" என்று காட்டியது. உங்களிடமிருந்து "போதும்" என்ற மூன்று எழுத்தால் ஆகிய ஒலி கேட்பதால், இந்த முறையிலே எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் "மூன்று" என்ற எண்ணையும் சொல்லையும், "வாழ்க" என்றமூன்றுஎழுத்துச்சொல்லால் வாழ்த்திக்கொண்டு, "நலம்" என்ற மூன்று எழுத்துச் சொல்லால் முடித்து, இதைப் படித்தமைக்கு உங்களுக்கு "நன்றி" என்ற மூன்று எழுத்துச் சொல்லால் நன்றி கூறிக் கொண்டு முடிக்கின்றேன்.

வணக்கம்

கா. நா. கணபதி,
II. வகுப்பு.

பேரொளி

கள்ளங் கபடமற்ற உலகம் அது. மனிதனாகப் பிறந்தவன் மானத்தோடு வாழ வழி வகுத்துக் கொள்ளாத காலம் அது. உடை என்பதை அவன் அறியான்; உறைவிடம் என்று ஒன்று இருக்கவில்லை அவனுக்கு. மனித உருவைப் பெற்றானே தவிர மனிதத் தன்மையை அவன் பெறவில்லை. கனிகளைத் தின்றான். இலைகளைப் பறித்து உண்டான். அவன் வாழ்ந்த சூழ்நிலையிலே பாசத்திற்கு உறைவிடமில்லை; இருதயத்திற்கு இடமில்லை. கட்டாரியைக் கொண்டு காட்டில் திரிந்தான். எதிர்ப்பட்டதை எதிர்த்தான். இரத்த வெள்ளத்திலே நீந்தினான். கண்ணுக்குப்பட்டதைக் கிழித்துத் தின்ன முயற்சி செய்தான். மானம், மனிதத் தன்மை என்ற தென்றலைப்பற்றி அவன் நினைக்கவில்லை. கொலை, புலை என்ற தீயைத் தாண்டிச் சென்றான்.

அப்பேர்ப்பட்ட மனிதனின் வாழ்வில் ஒருநாள் அறிவுச் சுடர் அதிகப் பிரகாசத்துடன் எரிவதற்கான நிகழ்ச்சிகள் காணப்பட்டன. கடுமையான பகலுக்குப் பின் குளிர்ந்த பூங்காற்று வீசத் தொடங்கியது. வானத்திலே கருமுகில் கூட்டங்கள் ஒன்றை ஒன்று தழுவி உருண்டன. பறவை இனங்களும் தம வரவுக்காகக் காத்துக்கிடக்கும் தம் குஞ்சுகளைத் தேடிக்கொண்டு தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தன. புலி, சிங்கம் போன்ற விலங்குகளும் வேட்டையின் களைப்பால் உறக்கம் மிகுந்து குகைகளில் அமைதியோடு காணப்பட்டன. தென்றல் ஆனந்தமாகத் தவழ ஆரம்பித்தது; கரியமேகத்திரை பொன்னிறமாகியது. பொன்னிறம் சிறிது சிறிதாகச் செந்நிறமாக மாறியது. வானம் முழுவதும் சிவப்பு மையால் தீட்டப்பட்டது போன்று காட்சியளித்தது. அந்தச் சிவந்த ஒளியின் சின்னமாகத் தோன்றினார் புத்தபெருமான். கருணையின் சிகரமாக, கண்ணியத்தின் கற்பகமாக; இருண்ட உலகில் பேரொளியாகக் காட்சியளித்தார். மேற்கு வானத்திலே தூங்குகின்ற சந்திரனை எழுப்புவதற்குமுன் ஏற்படும் சிவந்த ஒளியாகத் தோன்றினார். உண்மையை உணர்த்தும் உன்னத மனிதனாகத் தோன்றினார். இன்பத்தை நாடினார். ஆனால் குவிந்து கிடந்த பொற்கட்டிகளோடு தன் தலையை முட்டிக் கொள்ளவில்லை. ஆசைக்கும், ஆனந்தத்திற்கும் ஆளாகவில்லை. மக்களின் ஏக்கத்தைக் கண்டார். மனிதன், பசி, பிணி, நோய் என எங்கும் கோரக் காட்சியினைக் கண்டார். அரண்மனையிலே இருந்த இரும்புப் பணப்பெட்டியைப் பார்த்து இறுமாந்திருக்கவில்லை. ஆனால் இரக்கம் மிகுந்த இருதயங்களுக்காகப் பாடுபட்டார். தன் ஓயாத உழைப்பின் மூலம் மனிதனின் உள்ளத்தில் நல்வாழ்வை ஏற்படுத்தினார்.

அவர் வகுத்த பாதையைப் பின்பற்றினான் மனிதன் சிறிது, சிறிதாக; ஆனால் தவழ்ந்த மாலைத் தென்றலைத் துரத்தியது ஒரு பெரும்புயல். புத்தர் அமர வாழ்வை அடைந்தபின் இடர் எங்கும் படர ஆரம்பித்தது. எங்கும் "இருள்" இருள்" என்ற கோர ஒலி எல்லா மூலைகளிலும் கேட்டது. இருளின் பயங்கரத்திலே மனிதன் தானே சென்று கற்களிடம் முட்டிக்கொண்டான். திருட்டு, புரட்டு, நயவஞ்சகம் மறுபடியும் நடமாடின நானிலத்தில். மனிதனின் மனத்தில் ஈரத்திற்கு இடமில்லாமல் வறண்ட பாலைவனமாகியது. உறைந்த பனிக்கட்டியைப்போன்று உறைந்து கிடந்தது அவன் சிந்தனை. கடுமையான இருள்.........வையகத்தில் மட்டும் அல்ல; வாழ்விலும் கரிய இருட்டு.

இருளின் காலம் நீடிக்கவில்லை. அதை அழிக்க ஒரு சக்தி உலகில் தோன்றியது. அநீதியை அழிக்க, அன்பு உள்ளங்களை

உண்டாக்க, அமைதியைப் பரப்பத் தோன்றி ஞன் களங்கமற்ற அந்தச் சந்திரன். குளிர்ந்த காற்ருேடு விளையாடிக்கொண்டு கடல் அலைகளை அதிக அளவு எழுப்பிக் கொண்டு மடமை என்னும் இருள் நீக்கிப் பூரண அமைதியை உண்டாக்க உதித் தான். அதன் தண்ணொளியைக் கண்ட கயவர்களும், வஞ்சகர்களும், நல்லவர்களாக மாறினர். அந்தப் பேரொளி மனித உருக் கொண்டது. அந்த உருவம்தான் பரிசுத் தத்தின் பாத்திரமாக விளங்கிய இயேசு பிரான்.

அவர் தீயோரை வெறுக்கவில்லை. வைரி களை மார்போடு அணைத்தார். அவர்களின் உள்ளங்களிலே அன்பைத் தூவித் தூய்மைப் படுத்திஞர். அறியாமை சிறிது சிறிதாக விலகத்தொடங்கியது. சிலம்பை யணிந்த சிற்றிடையாள் மலர்மாலையுடன், மணமண் டபத்திற்குச் சென்று மணமகனுடன் வீற் றிருக்கும் பொழுது, அவள் தாமரை முகத் திலே ஏற்பட்ட களிப்பைப் போன்று உல கின் எல்லாப் பகுதிகளிலும் உல்லாசத்தின் அறிகுறிகள் காணப்பட்டன.

உலகின் நன்மையைக் கருதிய இயேசு பிரானின் பாதையிலே எத்தனையோ முட் டுக்கட்டைகள், தடைகள்—தண்டனைகள். கடைசியாக மடிந்தார் சிலுவையில் அறை யப்பட்டு. இரத்தத்தை பூமியில் தோய்த்து அதன்மூலம் அதைத் தூய்மைப்படுத்திஞர். இரத்தம் தோய்ந்த சிலுவை, சுடர்விட்டு விளங்கிய ஒளி சிறிது சிறிதாக எண்ணெய் குறைந்த விளக்கைப்போல் மங்க ஆரம்பித் தது. அமைதியைத் தந்த சந்திரனும்மறைந் தான்.

.........இடையே பகுத்தறிவு கொண்ட மனிதனிடையே பழமையானது அதிகஅள வில் குடிகொண்டது. அறிவுக்கு அடங்கா அநீதிகள் அவனிடம் அடங்கிக் கிடந்தன. உயரிய கொள்கைகளையும், கோட்பாட்டை யும் விட்டுப் பின்னேக்கிச் செல்ல ஆரம் பித்தான். விதியை எண்ணி வீணர்களை வளரவிட்டான். கடவுளின் பெயரால் கடமையில் தவறிஞன். பெண்ணின் பெரு மையை, வாழ்வின் சுடர் ஒளியை, ஒழுக்க மலையைக் குழிதோண்டிப் புதைக்க முற் பட்டான்.

அந்த ஒழுக்கங்கெட்ட மனிதனை நல்ல பாதையில் செலுத்த ஒரு மெய்ஞ்ஞானப் பரிதி தோன்றியது. நானில மககளிடையே ஒரு நல்ல வரவேற்பு. பழமையாளரிடை யே பயங்கரப் பரபரப்பு. ஒழுக்கத்தின் உயரிய சின்னங்கள் விளங்க, மூடப்பழக் கத்தை முறியடிக்கக் கடவுளின் தூதராய்த் தோன்றிஞர், நபிபெருமான். வழிதெரியாது தத்தளிக்கும் குருடனுக்கு வழிகாட்டவும், ஏழை மக்களின் வாழ்விலே விளக்கேற்றவும் பெண்களின் பெருமையைப் போற்றவும் தோன்றிஞர். நபிநாயகத்தின் ஒளி மூடக் கொள்கைளுக்கு முடிவைத் தேடியது! குளத்தில் படர்ந்த பாசியைப்போல் உலகில் நிறைந்த பேராசையை நீக்கியது, உலகம் ஒரு புது உணர்ச்சியுடன் உறக்கத்தினின் றும் எழுந்து பொலிவு படர்ந்த அழகிய உருவம் கொண்டது. சோம்பி இருந்த உழவன் ஏர், கலப்பையுடன் பண்பாடிக் கொண்டு வயலை அடைந்தான்! கூண்டிலே அடைபட்டுக் கிடந்த பஞ்சவர்ணக் கிளி சுற்றுப்புறச் சுதந்திர வாழ்வைக் காணச் சிறகடித்து வேகமாகப் பறந்து சென்றது. நபிபெருமான் நகைமுகமும், இனிய பேச் சும் உடைய உத்தமர். அறிவுத்திறனும் ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே அமையப் பெற்ற சின்னமாக விளங்கிஞர். தம் வாழ் வின் மூலம் மற்றவர்களுக்கு வாழும் வகை யைக் கற்பித்தார். ஆபத்துக்கு அஞ்சி, ஆண்மையற்று அடங்கி இருக்கவில்லை. விரோதிகள் தாக்கினும் தம் லட்சியத்தைப் பின்பற்றி வெற்றிகொண்ட அஞ்சா நெஞ் சர். குடிசையில் குமுறும் ஏழை வாழ வேண்டும் என எண்ணிஞர். ஏழைகளுக் குக் கொடுக்கத் தம்மிடம் உணவு, உடை இல்லையென்பதை அறிந்து பள்ளிவாசலிலே அழுதழுது கண்ணீர் வடித்தார். உல கம் இன்புறப் பல சுவையான கருத்துக்களை அளித்து இவற்றைக் கொண்டு இன் புறுங்கள்'' என்று அவர் கூறியதைக்கேட்ட நயவஞ்சகக் கூட்டம் ஒன்று நபிமணியின் புதுக்கருத்துக்களைப் புறக்கணித்தது. இன் னல் விளைவித்தனர் பல எதிரிகள். அவ

ருடைய வாழ்க்கைப் பாதையிலே பூமணம் கமழவில்லை, முட்கள் நிறைந்தன, பள்ள மேடுகள் பெருகின. உலகைச் சீர்ப்படுத்த வந்த செம்மலைக் கல்லால் அடித்தனர், கய வர்கள! மாநிலத்தின் மணிவிளக்கை எரியா வண்ணம் அணைத்துவிட எண்ணினர். ஆனால் அவர்கள் எல்லோரும் சூரியனைக் கண்ட பனி சிறிது சிறிதாக நீங்குவது போல் நீங்கினர். உண்மையொளி எங்கும் பரவியது.

உலகம் நல்வாழ்வைப் பெற்றது. வளப் பம் பெருக்கெடுத்தது. அன்றலர்ந்த மலர் நகைத்தது, இன்பம் மிக. பேரொளியின் பொற்கதிர்கள் எங்கும் இன்ப ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. வனத்திலே கருமுகில் கூட்டங்கள் ஒன்று சேர்ந் தன. குளிர்ந்த காற்று வீசத்தொடங் கியது. காற்றுடன் கலந்ததுமழை. அது ஞாலத்தை மாற்றி அமுத நிலமாகச் செய் தது. பூஞ்சோலையில் புதுமணம் தவழ்ந் தது. மயிலின் கூத்து, குயிலின் குரல், மேகத்தின் முரசொலி, மலரின் ஒளி, வண் டின் இசை இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இன்பத்தை அளித்தன. "ஆத வன்" ஆட்சியில் அவனி அகமகிழ்ந்தது. பொற்கொடிகள் இன்முகங் காட்டி அன்பு மொழி பேசின. அன்பு வளர்ந்தது. மாசு கள் மடிந்தன. முன்னே தோன்றிய பேரொளியின் வன்மையைக் கண்ட உலகம் பலமுறை "பேரொளி" "பேரொளி" எனப்பன்முறை பகர்ந்தது.

ம. ஏ. ஷெரீப்,
(I வகுப்பு.)

விகடத் துணுக்குகள்

காதில் விழாத விஷயம்.

1. முதல் செவிடன் :—என்ன கச்சேரிக் குப் போகிறீர்களோ?

இரண்டாவது செவிடன் :—இல்லை, இன்று கச்சேரிக்குப் போகிறேன்.

முதல் செவிடன் :—சரிதான், எங்கே யாவது கச்சேரிக்குத்தான் போகி றீர்களோ என்று நினைத்து விட் டேன்.

"ஆம், மானே!"

2. மனைவி :—மிருகங்களுக்குள்ளே மான் தான் ரொம்ப முட்டாளான பிராணி என்கிறார்களே. அது வாஸ்தவம்தானா?

கணவன் :—ஆமாம், என் மானே.

3. என்னையா அநியாயம்! முகூர்த்தத் துக்கு அரை மணி நேரம் தானிருக் கிறது, சம்பந்தி வீட்டுப் பேர்வழி கள் ஏதோ தகராறினால் பிள்ளைக் குக் கல்யாணம் வேண்டாமென்றார் களாமே!

போஜனப்பிரியர் :—அது எப்படியா வது ஆகிறது. இந்தச் சிறு விஷ யத்திற்காகச் சாப்பாடு நின்று விடாதே?

4. ராமு :—உன் தகப்பனார் இறந்து போ னாராமே, யார் யாருக்கு என்ன கிடைத்தது?

கோபு :—எனக்கு வீடு; என் தமைய னுக்கு நிலம்.

ராமு :—அவர் வைத்திருந்த ரொக்கம்?

கோபு :—அது வக்கீலுக்குக் கிடைத்தது.

5. பிரசங்கி :—ஒரு பெரிய சபையில் பேசுவதைப்போல் கஷ்டம் வேறொன்றும் இல்லை.

குறும்பன் :—அதைவிடக் கஷ்டம் உட்கார்ந்து கேட்பது இருக்கிறதே.

6. "ஐயா! நித்திரை செய்யும்போது கூட ஏன் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்கிறீர்கள்".

"கனவில் வருகிற மனிதர்களுடைய அங்க அடையாளங்கள் சரியாகத் தெரிகிறதில்லை."

7. மருத்துவர் :—நான் எழுதிக்கொடுத்த மருந்தை வாங்கிச் சாப்பிட்டீர்களா?

நோயாளி :—என் நண்பர் வந்தபோது அவரிடம் பணம் கடன் வாங்க மறந்து விட்டேன். நாளை கட்டாயம்........

மருத்துவர் :—அப்படியானால் மறதி இல்லாமலிருக்க மருந்து எழுதித் தருகிறேன். அதையும் வாங்கி.......

8. சேகர் :—மோட்டார்காரை ஐம்பது மைல் வேகத்தில் வைத்துச் சென்னையிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டால் $4\frac{1}{2}$ மணி நேரத்தில் எங்கிருக்கலாம்? சார்.!

ரவி :—ஆஸ்பத்திரியிலிருக்கலாம்.

ஜே. வெங்கடராமன்,
II வகுப்பு

நினைவும் முடிவும்.

நினைத்தபடி எல்லாம் முடிவதில்லை. நினைக்காமலோ இருக்க முடிவதில்லை. என்னே ஆச்சரியம்! மனிதன் தன்னால் முடியுமோ முடியாதோ எதையாவது செய்ய நினைக்கிறான். முயல்கிறான். முயல்கிறான். முயன்று கொண்டே இருக்கிறான்.

"அவனும் அப்படித்தான் முயன்றான்' என்று சொன்னால் 'அவன் யார்?' என்ற கேள்வி எழுகிறதல்லவா? "மண்ணில் புழுவைப்போல் மறைந்து, பூச்சியைப்போல் பறந்து, மண்ணோடு மண்ணாகவேண்டுமா?" என்ற எண்ணந்தான் அவன் உள்ளத்திலே எழும். அவன் குன்றிலிட்ட அனல் அல்ல. குடத்திலிட்ட அகல். குனிந்து தானே அதை நோக்க முடியும். அதுபோல நான் சொல்லித்தானே உங்களுக்கு அவனைப் பற்றித் தெரிந்து கொள்ளமுடியும்?

அவன் ஒரு கவியாக வாழ விரும்பினான். நினைத்தான் கவிதை எழுத! 'எப்படிக் கவிதை எழுதுவது?' இடையே எழுந்தது இக் கேள்வி. பலரைக் கண்டு விசாரித்தான். 'பிறவியிலேயே வரவேண்டும்' என்றனர் சிலர். 'காரிகைபடி, கவி பாடலாம்' என்றனர் சிலர். எதற்கும் இதற்கு முன் கவிகள் எழுதிய கவிதைகளைப் படிக்கலாம் என்று பல கவிதைப் புத்தகங்களை வாங்கினான். கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தான். 'உள்ளத்தில் எழுவது கவிதை' என்ற முடிவிற்கு வந்தான். 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்ற சொற்கள் அவனது நினைவுக்கு வந்தன—நாளொரு கவிதையும் பொழுதொரு கருத்துமாய் உள்ளத்தில் பொங்கி எழுந்தன.

அன்று ஒரு நாள் வாசலிலே பிச்சைக் காரர்களைப் பார்த்தான். வாடி வதங்கிய வடிவம். ஆனாலும் உள்ளத்திறனைக் கண்டான். ஒருவாய் உணவளித்தால் உழைத்துப் பிழைப்பான் என்று நினைத்தது, அவன் உள்ளம். அத்துடன் சேர்ந்தது அவனது கவிதை வெள்ளம்.

"ஆர்த்திடும் ஓலமிதைக் கேளீரோ?
சேர்ந்திடும் துயர்உருக் காணீரோ?
வார்த்திடும் அன்புடன் கூழ்தன்னைப்
பார்த்திடும் எலும்பைத்தெம்புடனே!

என்று உரத்த குரலிலே பாடத்தொடங்கினான் நினைத்தபடி நடந்ததா ?" உனக்கே தண்டச்சோறு. அதிலும் அவனுக்கும் அளிக்கச் சொல்கிறாயோ ?" என்ற ஏசல் தான் முடிவு.

*　　*　　*　　*

நவராத்திரி பண்டிகை. வண்ணச் சேலைகள் உடுத்தி வண்ணத்திப் பூச்சியெனத் திரிந்தனர் வனிதையர். பார்த்தான் நமது 'அவனும்' 'என்னே அறியாமை!' என்ற பச்சாத்தாபத்தோடு பிறந்தது வருத்தம். அதைத் தொடர்ந்தது கவிதைச் சித்திரம். இக் கவிதையைச் செவியுற்றால் பெண்கள் நாணுவார்கள் என்று எண்ணிச் சமயத்தை எதிர் பார்த்திருந்தான். காலமும் வந்தது. கன்னியர்நால்வர் முன்,

"கொலு பல வைப்பார்; கொட்டகை
மிகப் போட்டிடுவார்.
நாலு பேர் சேர்ந்திருந்து நாகரிகமாய்ப்
பேசிடுவார்;
"ஏதடி, நீ வீட்டிற் கிங்குவரவில்லை?"
என்றால்
"காதவழி வரக் காரில் பெட்ரோல் இல்லை"
என்பார்
"ஓயாத தலை வலியால் உளம் வெதும்பி
விட்டேன்" என்பார்
"மாயாத வேலையிலே மறந்து விட்டேன்"
என்பார்
சளையாமல் சொல்லிடுவார்; சைகை பல
காட்டிடுவார்.
வேளையது கிடைத்தாலே வீண்வம்பு
வம்பு வளர்த்திடுவார்.
விரதப் பண்(பு) உணராமல் வீணில்
பொருள் செலவிடுவார்
பெண்களாற் பட்டகஷ்டம் பெரிதாகும்
காண்பீரே,

என்ற தன்னுடைய கவிதையைக் கூறினான். ஒருத்தி கோபங்கொண்டாள், மற்றொருத்தி கொடூரமாய்ப் பார்த்தாள். பண்டிகை கொண்டாடப் பணம் செலவழியும் என்ற எண்ணத்தில் அவன் கூறுவதாக எண்ணி,

"தரித்திரம், தரித்திரம், எதிலும்
தரித்திரம்
இதோ இவரது வாழ்க்கையின் சரித்
திரம்"

என்று ஒரு பழக்கமான சினிமா ட்யூனில் பாடி நையாண்டி செய்தாள். மற்றவளோ,

'பெண்களில்லா விடிலோ பேயிடமாவது
காணீர்!

என்று அவன் பாடலைப் பூர்த்தி செய்வதுபோல் கூறினாள்.

*　　*　　*　　*

'வருகுது வனப்புமிகு வாழ்க்கை
வருத்துப் பயனடையாக்கை
அருளது மங்கியது தாழ்வு
அன்பு நல் வாழ்வு உயர்வு
கருணை பல் காட்டி யிவ் வுலகில்
கடைப்பிடி அன்பு சொல் செயலும்
அருள்வேண்டி அவனியில் நின்மன
மெய் மொழி கடந்தோனைத் துதித்
திடு'

என்று எழுதினான். இக் கவிதையை நண்பர்கள் புகழ்வார்கள் என்று எண்ணினான். நண்பர்களிடம் கவிதையைக் காட்டினான் " இவனென்ன இளங்கோவா? அல்லது கம்பனா கவிதை எழுத? என்று எள்ளி நகையாடினர். புகழத்தான் இல்லை. இகழாமலாவது இருக்கக் கூடாதா? இதனைக் கண்டு அவன் மனம் நொந்தான். புழுவெனத் துடித்தான்.

*   *   *   *

நினைத்தது நடக்கவில்லை. எதிர் பார்த்தல் என்பது ஓர் ஒளி. ஏமாற்றம் என்பது நிழல். ஒளியின் தன்மையைப் பொறுத்துத் தானே நிழலின் தன்மையும்? இவன் விஷயத்தில் மட்டும் விதிவிலக்கா?

நினைத்ததைப்போல முடிவிருந்தாலோ அளவற்ற ஆனந்தம். எதிர் மறையாக இருந்தாலோ எல்லையற்ற ஏமாற்றம். ஏமாற்றம் வெறுப்பாக மாறுகிறது. வெறுப்பு நியாயத்தை மறைக்கிறது. உலகத்தை மறக்கிறான். உண்மையை மறுக்கிறான். முடிவு என்ன? அழிவுக்கத்திற்கு ஆக்கம் அளிக்கிறான். அதோடு ஆக்குந்திறமைக்கும் அழிவை அழைக்கிறான்.

ஆனால் இப்பொழுது நான் நினைத்தேனே இந்த முடிவிற்கு அவன் வரவில்லை, கவிதை எழுதுவதைக் கைகழுவி விட்டு, குமாஸ்தா வேலைக்குக் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டிருக்கிறான் அவன். நினைவும் முடிவும் விசித்திரமாக இல்லையா?

K. கோபாலகிருஷ்ணன்,
II வகுப்பு.

தேதி, மாதம்	கூட்டத்தின் வகையும் பொருளும்	தலைவர்	சொற்பொழிவாளர்
1— 9—'53	ஆரம்பக்கூட்டம்	திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.	வித்துவான் திரு. எஸ். ஆறுமுக முதலியார், M.A., L.T., B.O L.
9—10—'53	பயிற்சிக் கூட்டம். போதனு முறையில் தமிழின் இடம்.	வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்.	மாணவர்கள் பலர்.
,,	அநுதாபக் கூட்டம். திரு. வி. க. மறைவு குறித்து	ஷை	ஷை
,,	திரு. பண்டிதமணி கதிரேசச் செட்டியார் மறைவு குறித்து.	திரு. T. K. கோபாலய்யர், B.A.	திரு. J. பாலகிருட்டினன்-II. P. மருதன்-I.
12—10—'53	தேசீய மஹாகவி பாரதி விழா.	திரு. J. பாலகிருட்டினன்.	திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M.A.
23—10—'53	சொற்போர் — நாட்டினை முன் அணிக்குக் கொண்டுவருபவன் எழுத்தாளனு அன்றி வீரனு?	திரு. K. R. அப்பாசாரியார், M.A., L.T.	திரு. T. V. ராமமூர்த்தி-II. ஆரோக்கியம் ஜார்ஜ்-II, விஜயராகவன்-I முதலியோர்.
30—10—'53	பயிற்சிக் கூட்டம். தமிழ் நூல்கள்.	திரு. S. மாணிக்கம், M.A., B.T.	திரு. S. குமாரசாமி-I, ,, J. பாலகிருட்டினன்-II, முதலியோர்.

D

27—11—'53	சொற்போர்:- இன்றைய கல்லூரிகளின் கல்வி முறை நாட்டிற்கு நன்மை பயக்காது.	திரு. T. K. கோபாலையர், B.A.	திரு. ஆனந்த ஷண்முகம்-II. அனந்தாழ்வார்-I. ரகுபதி-I. J. பாலகிருட்டினன்-II, முதலியோர்.
22— 1—'54	தமிழர் திருநாள்.	வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்	மாணவர் பலர்.
9— 2—'54	பேச்சுப் போட்டி.	நடுவணர்கள் :— திரு. சுப்பிரமணியம், M.A. திரு. மீனாட்சி சுந்தரனார், M.A. திரு. K. R. அப்பாச்சாரியார், M.A., L.T.	பரிசு பெற்றவர்கள் :— 1st. திரு. T. V. ராமமூர்த்தி II-வகுப்பு. 2nd. திரு. எம். அப்துல்லா ஷெரிப் I-வகுப்பு.
11— 2—'54	கர்நாடக இசைப்போட்டி.	நடுவணர்கள் :— திருமதி சீதம்மாள். திரு. வடிவேலாயுதம்பிள்ளை. திரு. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்.	பரிசுபெற்றவர்கள் :— 1st. திரு. V. R. கிருஷ்ணன் I-வகுப்பு. 2nd. எம். அப்துல்லா ஷெரீப் I-வகுப்பு
17— 2—'54	அநுதாபக்கூட்டம். திரு. T. K. C. அவர்கள் மறைவு குறித்து.	திரு. T. K. கோபாலையர்.	திரு. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார். ,, பாலகிருட்டினன்-II. ,, மருதன்-I. ,, அப்துல்லா ஷெரீப்-I, முதலியோர்.

6— 2—'54 மாணவர் மன்றம், சென்னை.—இடைநிலைக் கல்லூரி வகுப்புத் தமிழ்த் தேர்விற்கு 40 மாணவர்கள் சென்றனர். அனைவரும் வெற்றி பெற்றனர்.

மூவர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர் :—J. பாலகிருட்டினன், K. S. கோதண்டராமன், R. நாராயணன்

11 DEC 1958